ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:

ஸம்ஸ்க்ருத த்ருதீயபாட:

மூன்றாம்பாடம்.

உத்திரமும் பதில் உத்தரத்திர்க்குச் சரியான

தமிழ் தாத்பர்யம்.

திருமழிசை. கோ. க. அப்பளாசார்யரால்

எழுதப்பட்டு.

அ. அனந்தாசார்யரால்,

சென்னை,

சாஸ்திரஸஞ்சீவினீ அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

1921.

இதன் விலை,] [அணா-10.

Swaminathaguru

V Subramaniaguru

17-9-24

Swaminathan

Swa

Swa

Swam

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ ஹயக்ரீவாய நம:.

ஸம்ஸ்க்ருத த்ருதீயபாட:.

மூன்றாம்பாடம்.

1 - பிதாபுத்ர ஸம்வாத:.

தகப்பனுக்கும் மகனுக்கும் ஸம்பாஷணை.

பிதா:—வத்ஸ! இயந்தம் காலம் குத்ர கத ஆஸீ:? கிம் கார்ஷீ:? குதஸ்த்வம் வ்ருதா காலம் யாபயஸி?

தகப்பன்:—குழந்தாய்! இத்தனை நாழிகை எங்கே போயிருந்தாய்? என்ன செய்தாய்! ஏன் இப்படி வீணாகக் காலங் கழிக்கிறாய்?

புத்ர:— தாத! பவதாஜ்ஞாம் ப்ராப்யைவாஹம் பாடசாலாம் ப்ரதி ப்ரயாதவான் | தத ஏவாஹமிதானீம் நிவர்த்தமானோஸ்மி | நாஹம் க்ஷணமபி வ்ருதா வர்த்திஷ்யே.

மகன்:—அப்பா! உம்முடைய உத்தரவு பெற்றுத்தானே நான் பாடசாலைக்குப் போனேன். அங்கிருந்தே நான் இப்போது திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். ஒரு க்ஷணகாலமும் நான் வீணாக இருக்க மாட்டேன்.

ஜநக:—ஸாது! குதஸ்த்வம் வித்யாமப்யஸஸி? ஸ்வீய ஸவயஸ்க பாலகா: க்ரீடந்தோபி ப்ராஜ்ஞா: ஸந்தி தேஹஸ்ய பலிஷ்டா யாபயேவ வர்த்தமானம் கிம் ந பச்யாஸி? சரீரம் தே க்ருசமிவ த்ருச்யதே | தஸ்மாத் க்ரீடஸி | க்ரீடாவ்யாயாமம் குரு.

தந்தை:—பிள்ளாய்! என் இப்படி பொய் சொல்லுகிறாய்? உன் பலகை புஸ்தகம் பலப்பம் பேனா முதலியவை யெல்லாம் இடைகழித் திண்ணையிலேயே இருப்பதை நான் பார்க் வில்லையா? உன் உடம்பு காயம் பட்டது போல் காண்கிறது. உண்மையைச் சொல்லு. எப்போதும் பொய் சொல்லாதே.

குமார:—பித:! தக்ஷிணாலாபேச்சயா க்ருஷ்ணசாஸ்த்ரிணோ க்ருஹே உபநயநகல்யாணம் பவதீதி பாலகாஸ்ஸர்வேऽபி தத்ர ஜக்மு:। தக்ஷிணாலாபாசயா போஜநகாங்க்ஷயா ச அஹமபி தைஸ்ஸஹாகமம்। (இதி வதந் ரோதிதுமாரேபே).

சிறுவன்:—அண்ணா! தெற்கு ரத வீதியில் கிருஷ்ண சாஸ்திரியின் வீட்டில் பூணூல் கல்யாணம் நடக்கிறதென்று பசங்களெல்லாரும் போனார்கள், தக்ஷிணையிலுள்ள ஆசையாலும் சாப்பாட்டு விருப்பத்தாலும் நானும் அவர்களுடன் போனேன். (என்று சொல்லிக் கொண்டு அழத் தொடங்கினான்.)

ஜநக:—ஆயுஷ்மந்! மாஸ்ம ரோதீ:, அஹம் த்வாம் ந தாடயிஷ்யாமி, மா பிபீஹி, தத: பரம் வ்ருத்தம் வ்யாஹர, கியத் தக்ஷிணா தத்ர லப்தா? அபி புக்தம்?

தந்தை:—ஸாமி! அழாதே. உன்னை நான் அடிக்கப் போகிறதில்லை. பயப் படாதே. அதற்கு மேல் நடந்ததைச் சொல்லு. எவ்வளவு தக்ஷிணை அங்கே கிடைத்தது? சாப்பட்டாயிற்றா?

பாலக:—தஸ்மிந் க்ருஹே வயோதிகேப்ய: பாதரூப்யம் தக்ஷிணா தத்தா. பாலகேப்ய ஏககாணா தத்தா. பிதரம் விநா ஆகதாய கேவலம் பாலகாய தஸ்மை வ்ருத்தேப்ய இவ பாதரூப்யம் தத்தம், அத ஏவ மஹ்யம் காணாசதுஷ்டயம் ப்ராப்தம்.

சிறுவன்:—அந்த வீட்டில் பெரியவர்களுக்குக் கால் ரூபாயும் தக்ஷிணை கொடுக்கப்பட்டது. சிறுவர்களுக்கு ஒரு அணா கொடுக்கப்பட்டது. தகப்பனில்லாமல் பிள்ளை மாத்திரம் வந்திருந்தால் அவனுக்குப் பெரியவர்களுக்குப் போல் கால் ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆகையாலே எனக்கு நாலணா கொடுத்தார்கள்.

பிதா:—ஶரீரே க்ஷதமிதம் கதம் ஸஞ்ஜாதம், கேந தாடிதோऽஸி? கிமேவமாசரிதம் த்வயா, அவச்யமேவ ஸத்யம் த்வயா வக்தவ்யம், ஶ்லாக்யபாஷணம் தாஸ்யாமி.

தகப்பன்:—உடம்பில் இந்த காயம் எப்படி உண்டாயிற்று? எவனால் அடிபட்டாய்? என்ன தப்பு செய்தாய். ஒளியாமல் உள்ளபடி சொல்லு. இனிய தேன் மாம்பழம் கொடுப்பேன்.

𑌬𑌾𑌲𑌕𑌃—𑌤𑌾𑌤 𑌅𑌦𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃 𑌰𑌾𑌮𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌤𑌤𑍍𑌰 𑌸𑌮𑌾𑌗𑌤 𑌆𑌸𑍀𑌤𑍍, 𑌤𑌸𑍍𑌯 𑌜𑌨𑌕𑌶𑍍𑌚 𑌸𑌮𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑍍, 𑌅𑌤𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍇 𑌏𑌕𑌾𑌣𑌕𑌾𑌮𑍇𑌵 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌦𑍁𑌃, 𑌮𑌦𑍀𑌯𑌚𑌤𑍁𑌰𑌾𑌣𑌕𑍇𑌷𑍁 𑌭𑌾𑌗𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑌾𑌨𑍍, 𑌅𑌹𑌂 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌮𑍍, 𑌅𑌥 𑌸 𑌮𑌾𑌂 𑌤𑌾𑌡𑌿𑌤𑌵𑌾𑌨𑍍, (𑌇𑌤𑌿 𑌰𑍋𑌦𑌿𑌤𑌿).

மகன்:—மாமா பிள்ளை ராமஸ்வாமி அவ்விடம் வந்திருந்தான். அவன் தகப்பனாரும் வந்திருந்தார். ஆனதுபற்றி ராமஸ்வாமிக்கு ஒரே அணா தக்ஷிணை கொடுத்தார்கள். அவன் என்னுடைய நாலணாவில் பங்கு வேணுமென்றான். நான் தரவில்லை. பிறகு அவன் என்னை அடித்தான் (என்று அழுகிறான்.)

𑌜𑌨𑌕𑌃—𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌃, 𑌤𑌦𑍁𑌪𑌰𑌿 𑌭𑍋𑌜𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿.

தந்தை:—தக்ஷிணை பெற்ற வரலாறு தெரிந்தது. அதற்கு மேல் சாப்பாட்டு விசேஷத்தைச் சொல்லு.

𑌬𑌾𑌲𑌕𑌃—𑌪𑌞𑍍𑌚𑌶𑌤𑌾𑌧𑌿𑌕𑌾 𑌜𑌨𑌾 𑌭𑍋𑌜𑌨𑌾𑌯 𑌸𑌮𑌾𑌗𑌤𑍍𑌯 𑌵𑍀𑌥𑍀𑌮𑌪𑍂𑌰𑌯𑌨𑍍, 𑌪𑌰𑌨𑍍𑌤𑍁 𑌤𑌾𑌵𑌤𑌾𑌂 𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌵𑍇𑌶𑌨𑌾𑌯 𑌗𑍃𑌹𑍇 𑌅𑌵𑌕𑌾𑌶𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌥𑌮𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌶𑌤𑌂 𑌜𑌨𑌾 𑌉𑌪𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌃, 𑌤𑍇𑌷𑍁 𑌬𑌾𑌲𑌕𑌾𑌃 [illegible] 𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌤𑍍, 𑌤𑌦𑍍𑌗𑍃𑌹𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌕𑍃𑌷𑍍𑌣𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌮𑌾𑌂 [illegible] 𑌮𑌹𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌉𑌪𑌵𑍇𑌶𑌯𑌾𑌮𑌾𑌸, 𑌅𑌨𑍍𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌬𑌾𑌲𑌾 𑌅𑌙𑍍𑌗𑌣𑍇 𑌉𑌪𑌵𑌿𑌷𑍍𑌟𑌾𑌃.

மகன்:—ஐந்நூறு பேர்களுக்கு மேற்பட்டவர்கள் சாப்பாட்டுக்காக வந்து தெருவை நிறைத்து விட்டார்கள், ஆனால் அவ்வளவு ஜனங்கள் உட்காருவதற்கு வீட்டில் இடமில்லாமையால் முதல் தடவையில் இருநூறு பேர் உட்கார வைக்கப்பட்டார்கள். அவர்களில் சிறுவர்கள் சுமார் 50 பேர் அவ்வீட்டுக்காரராகிய கிருஷ்ண சாஸ்திரிகள் என்னை ஸ்பெஷலாக ஆதரித்துப் பெரியவர்களுடன் கூட உட்கார வைத்தார். மற்ற சிறுவர்களெல்லாம் முற்றத்தில் உட்கார்ந்தார்கள்.

𑌤𑌾𑌤𑌃—𑌵𑌤𑍍𑌸! 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌅𑌤𑍀𑌵 𑌗𑍌𑌰𑌵𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌿𑌤𑍋𑌽𑌸𑌿, 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌃, 𑌕𑌾𑌨𑌿𑌕𑌾𑌨𑌿 𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌣𑌿 𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑌿𑌤𑌾𑌨𑌿?

தந்தை:—பிள்ளாய்! என்னைப்பற்றி நீ அதிகமாகவே கௌரவிக்கப்பட்டாய். எனக்கு மிகவும் ஸந்தோஷம், என்ன பக்ஷணங்கள் ஸாதிக்கப்பட்டன?

𑌕𑍁𑌮𑌾𑌰𑌃—𑌶𑌾𑌕𑌾𑌦𑌿𑌕𑌮𑌪𑌿 𑌕𑌥𑌯𑌾𑌮𑌿, 𑌕𑌦𑌲𑍀, 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌂, 𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌕𑍀 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌯𑌃 𑌨𑌾𑌲𑌿𑌕𑍇𑌲𑌚𑍂𑌰𑍍𑌣𑌸𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌃 𑌸𑍍𑌵𑌾𑌦𑍁 𑌪𑌕𑍍𑌵𑌾𑌃.

சிறுவன்:—கறியமுது முதலியவற்றையும் சொல்லுகிறேன். வாழை, கல்யாண பூசினி, கத்தாரிக்காய்கள் தேங்காய் சேர்த்து இனிப்பாகச் சமைக்கப்பட்டிருந்தன.

𑌦𑌧𑌿𑌮𑌾𑌷𑌾𑌪𑍂𑌪𑌃, 𑌪𑌰𑍍𑌪𑌟𑌂, 𑌵𑌟𑌕𑌃, 𑌲𑌡𑍍𑌡𑍁𑌕𑌂 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌾𑌨𑌿 𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌣𑌿 𑌅𑌤𑌿𑌰𑍁𑌚𑌿𑌰𑌾𑌣𑍍𑌯𑌾𑌸𑌨𑍍.

தயிர் வடை, அப்பளம் வடாம், லட்டு இப்பக்ஷியங்கள் வெகு ருசியாயிருந்தன.

𑌪𑌾𑌯𑌸𑍇 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌂 𑌕𑍍𑌷𑍀𑌰𑌂 𑌚 𑌵𑌿𑌨𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌤𑍍 𑌕𑌿𑌮𑌪𑍍𑌯𑌾𑌸𑍀𑌤𑍍, 𑌚𑌿𑌞𑍍𑌚𑌾𑌨𑍍𑌨 𑌮𑌰𑍀𑌚𑌿𑌕𑌾𑌨𑍍𑌨 𑌤𑌿𑌲𑌾𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌕𑌂 𑌪𑌰𑌮𑌭𑍋𑌗𑍍𑌯𑌂 𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑌿𑌤𑌂, 𑌦𑌧𑌿𑌦𑍍𑌰𑌵𑌾𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌭𑍋𑌗𑍍𑌯𑌤𑌾 𑌵𑌾𑌚𑌾𑌮𑌗𑍋𑌚𑌰𑌾.

கன்னலமுதில் வெள்ளைச் சர்க்கரையும் பாலுந் தவிர வேறொன்று மில்லை. புளியோரை, மிளகோரை, எள்ளோரை முதலியவை மிகவும் போக்யமானவை பரிமாறப்பட்டது. பகாளி பாதிலுடைய போக்யதையை வாயால் சொல்லி முடியாது.

𑌪𑌿𑌤𑌾—𑌵𑌤𑍍𑌸! 𑌇𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾, 𑌏𑌤𑌾𑌦𑍃𑌶𑌂 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌚 𑌤𑌵 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂 𑌲𑌭𑍍𑌯𑍇𑌤?

தகப்பன்:—பையா! இந்த தக்ஷிணையும் இப்படிப்பட்ட சாப்பாடும் உன் ஆயுஸ்ஸு வரையிலும் தினந்தோறும் உனக்குக் கிடைக்குமா?

𑌬𑌾𑌲𑌃—𑌅𑌵𑌨𑌤𑌶𑌿𑌰𑌸𑍍𑌕𑌃 𑌪𑌾𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑍇𑌨 𑌮𑌹𑍀𑌂 𑌉𑌲𑍍𑌲𑌿𑌖𑌨𑍍 𑌲𑌜𑍍𑌜𑌾𑌂 𑌨𑌾𑌟𑌯𑌨𑍍 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿.

சிறுவன்:—தலை குனிந்து, கால் கட்டை விரலினல் தரையைக் கீறிக் கொண்டு வெட்க மடைந்தவன் போல் வெறுமனே நிற்கிறான்.

𑌜𑌨𑌕𑌃—𑌵𑌤𑍍𑌸! 𑌈𑌶𑍍𑌵𑌰𑍇𑌣 𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑍋 𑌯𑌥𑌾𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑍁 𑌉𑌦𑌰𑌂 𑌬𑌿𑌭𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌵, 𑌅𑌭𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃, 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾, 𑌵𑌿𑌷𑌯𑌭𑍋𑌗𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌜𑌨𑍍𑌤𑍁𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌾𑌃, 𑌪𑌶𑍁𑌭𑍍𑌯𑍋 𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑌯𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌨𑍍 𑌸𑍃𑌷𑍍𑌟𑌵𑌤 𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌅𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌕𑌿𑌂 𑌨𑌾𑌵𑌧𑌾𑌰𑍍𑌯𑌃?

தந்தை:—அடா! கடவுளால் படைக்கப்பட்ட எல்லா பிராணிகளும் எப்படியோ வயிற்றை நிறைத்துக் கொள்ளுகின்றன, உண்பதும் உறங்குவதும் விஷய போகஞ் செய்வதும் எல்லா ஜந்துக்களுக்கும் பொதுவானவை. ஆடுமாடுகளைக் காட்டிலும் வேறுபாடாக மனிதர்களைப் படைத்திருக்கும் கடவுளின் உட்கருத்தைக் கவனிக்க வேண்டாமா?

𑌸𑍁𑌤𑌨𑍁𑌃—𑌅𑌥 𑌕𑌿𑌂, 𑌅𑌵𑌧𑍇𑌯𑌮𑍇𑌵, 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑌮𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌂 𑌕𑌿𑌂?

மகன்:—ஆம், கவனிக்க வேண்டியது தான். மநுஷ்யர்களுக்கு முக்கியமாக ஸம்பாதிக்க வேண்டியது என்ன?

𑌪𑌿𑌤𑌾—𑌶𑍍𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌨𑌿𑌶𑌮𑌯, "𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌹𑌿 𑌨𑍃𑌣𑌾𑌮𑌧𑌿𑌕𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌹𑍀𑌨𑌾𑌃 𑌪𑌶𑍁𑌭𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌨𑌾𑌃"॥ 𑌇𑌤𑌿 𑌸𑌕𑌲𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌉𑌦𑍍𑌘𑍁𑌷𑍍𑌯𑌤𑍇.

தகப்பன்:—இந்த ச்லோகத்தைக் கேளு. "ஞானந்தான் மனிதர்க்கு உயர்ந்த விசேஷம். அறிவில்லாதவர்கள் ஆடுமாடுகளுக்குச் சரியானவர்கள்" என்று எல்லா நூல்களிலும் முறையிடப்படுகின்றது.

𑌅𑌜𑌗𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑌾? 𑌤𑍇𑌽𑌪𑌿 𑌚𑍇𑌤𑌨𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌾 𑌏𑌵 𑌇𑌤𑌿 𑌪𑍃𑌚𑍍𑌛𑌸𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌚𑌨𑌂 𑌶𑍃𑌣𑍁?

ஆடுமாடுகள் முதலியவற்றுக்கு அறிவு இல்லையா? அவைகளும் சேதநப்பொருள்கள் தானே. என்று கேட்பாயாகில் பதில் சொல்லுகிறேன் கேள்.

𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌨𑍍𑌨 𑌸𑌾𑌧𑍀𑌯𑌃, 𑌤𑌥𑌾𑌸𑌤𑌿 𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑌪𑌾𑌯𑌿𑌜𑌨𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌤𑌦𑌪𑍇𑌕𑍍𑌷𑌯𑌾 𑌵𑌯𑍋𑌽𑌧𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 𑌕𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃.

சைதந்யம் மாத்திரம் ஞானமென்று நீ நினைக்கிறாய். அது சரியல்ல. அப்படியாகில் முலைப்பாலுண்கிற குட்டிகளுக்கும் சைதந்யமுண்டு. அதுகளிற் காட்டிலும் வயது சென்றவர்களுக்கு என்ன மேன்மை ?

𑌅𑌵𑌧𑌾𑌨𑍇𑌨 𑌶𑍃𑌣𑍁, 𑌅𑌨𑍍𑌤𑌤𑌃 𑌅𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍋 𑌵𑌰𑍍𑌤𑌤 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌂, 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌕𑍇 𑌕𑍇 𑌆𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌸𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑍀𑌯𑌂, 𑌤𑌦𑍍𑌦𑌾𑌸𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌕𑍀𑌦𑍃𑌶𑌮𑌿𑌤𑌿 𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌂, 𑌅𑌤𑌿𑌨𑌿𑌹𑍀𑌨𑍈𑌰𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑌥𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑍇𑌤? 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑍀𑌯𑌃, 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌰𑌮𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌫𑌲𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃; 𑌬𑌹𑍁𑌭𑌿𑌃 𑌸 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌕𑍁𑌤𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌃 𑌕𑌰𑌣𑍀𑌯𑌃, 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑌮𑍇𑌵 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇.

கவனிப்புடன் கேள். கடைசியாக நம்மால் அடையத் தக்க கடவுள் உண்டென்று அறிய வேணும். அக்கடவுளுக்கு என்னென்ன அதிசயங்கள் உள்ளன வென்று ஆராய வேண்டும். அவனுக்கு அடிமைப்பட்ட நம்முடைய தன்மை எத்தகையது என்று ஆலோசிக்க வேண்டும். மிகவும் தாழ்ந்தவர்களாகிய நம்மால் எல்லார்க்கும் மேற்பட்டவனான எம்பெருமான் எவ்வாறு அடையக் கூடியவன் என்று அடையும் வழி ஆராய வேண்டும். கடவுளை அடைந்த பிறகு நம்மால் செய்யத் தக்கதென வென்று பயன் யோசிக்க வேண்டும். பல பேர்களால் அவ்வெம்பெருமான் என் அடையப் படுகிறதில்லை யென்று அதற்குண்டான விரோதியைப்பற்றி ஆராய வேண்டும். இப்படிப்பட்ட பகுத்தறிவுதான் ஞான மென்று சொல்லக்கூடும்.

𑌛𑌾𑌤𑍍𑌰𑌃—𑌏𑌤𑌾𑌦𑍃𑌶𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌕𑌥𑌂 𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯𑍇𑌤, 𑌕𑌿𑌯𑌤𑌾 𑌕𑌾𑌲𑍇𑌨 𑌸𑌂𑌪𑌾𑌦𑍍𑌯𑍇𑌤? 𑌸𑌂𑌪𑌾𑌦𑌨𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 𑌕𑍇?

பிள்ளை:—இப்படிப்பட்ட ஞானம் எப்படி சம்பாதிக்க வேண்டும். எத்தனை நாள் கஷ்டப்பட்டு ஸம்பாதிக்க வேண்டும். ஸம்பாதிக்கக் கூடிய அதிகாரிகள் யார்?

𑌪𑌿𑌤𑌾—𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑍍𑌪𑌾𑌦𑌨𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌮𑌾𑌨𑌵𑌾𑌨𑌾𑌮𑌧𑌿𑌕𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌵𑍇𑌦𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌯𑌜𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 𑌕𑌤𑌿𑌪𑌯𑍇𑌷𑍍𑌵𑍇𑌵 𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌶𑍂𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌃, 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑌾 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌿, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌠𑌨𑍇𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂, 𑌕𑌾𑌲𑌾𑌵𑌧𑌿𑌸𑍍𑌤𑍁 𑌦𑍁𑌰𑍍𑌵𑌚𑌃.

தந்தை:—ஞானம் ஸம்பாதிப்பதில் எல்லா மனிதர்களுக்கும் அதிகாரமுண்டு. ஆனால் வேதமோதுதல் யாகஞ் செய்தல் முதலிய சில காரியங்களில் மட்டும் சூத்ரர்கள் அதிகாரமற்றவர்கள். பெரிய பண்டிதர்களான முன்னோர்களால் செய்யப்பட்ட நூல்கள் கணக்கில்லாம லிருக்கின்றன. அவற்றைப் படிப்பதனால் ஞான முண்டாகும். கால வரம்பு சொல்ல முடியாது.

𑌬𑌾𑌲𑌃—𑌕𑌾𑌲𑌾𑌵𑌧𑌿𑌃 𑌕𑍁𑌤𑍋 𑌨𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇? 𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌂 𑌪𑌠𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑍇𑌵𑌵𑌾?

சிறுவன்:—கால வரம்பு என் சொல்ல முடியாது? ஆயுள் உள்ளவரை படிக்க வேண்டியது தானோ?

𑌪𑌿𑌤𑌾—"𑌅𑌨𑌨𑍍𑌤𑌪𑌾𑌰𑌂 𑌬𑌹𑍁 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌲𑍍𑌪𑌶𑍍𑌚 𑌕𑌾𑌲𑍋 𑌬𑌹𑌵𑌶𑍍𑌚 𑌵𑌿𑌘𑍍𑌨𑌾𑌃" 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌸𑍍𑌤𑌿, 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍇𑌕𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃.

தந்தை:—"கங்கு கரையில்லாமல் அறிய வேண்டிய விஷயங்கள் அளவற்றிருக்கின்றன. காலமோ ஸ்வல்பம். இடையூறுகளோ அதிகம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஸர்வேச்வரன் ஒருவன் தவிர எல்லா மறிந்தவன் வேறொருவனுமில்லை.

𑌵𑍃𑌥𑌾 𑌸𑌲𑍍𑌲𑌾𑌪𑍇𑌨 𑌕𑍁𑌤𑌃 𑌕𑌾𑌲𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑌸𑌿, 𑌘𑌣𑍍𑌟𑌾𑌤𑍍𑌰𑌯𑌵𑌾𑌦𑌨𑌾𑌵𑌸𑌰𑌸𑍍𑌸𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑌃, 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌫𑌲𑌕𑌾𑌦𑌿𑌕𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌲𑌯𑌂 𑌯𑌾𑌹𑌿.

வீண் பேச்சு பேசிக்கொண்டு ஏன் காலங் கழிக்கிறாய். மூன்று மணி அடிக்கும் நேரமாயிற்று. புத்தகம் பலகை முதலியவற்றை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போ.

வத்ஸ! இமம் ஶ்லோகம் கண்ட²ஸ்த²ய, "அங்கு³ஷ்ட²மாத்ரபரிமாண ஜிஹ்வாக்³ராயாஸ பீ⁴ரவ꞉, ஸர்வாங்கீ³ண பரிக்லேஶம் ஸஹந்தே ஸததம் ஹி".

பையா! இந்த ஸ்லோகத்தை உருப்போடு. கட்டை விரலத்தனை அளவுள்ள நாக்குநுனியை வருத்தப்படுத்த அஞ்சுகிறவர்கள் எல்லா வுடம்பினுலுமுண்டாகக் கூடிய ப்ரயாஸத்தை எப்போதும் அநுபவிக்கக் கடமைப் பட்டவர்களாவர்.

[அதாவது:—நாக்கை வருத்தப்படுத்தி வாசித்து விட்டால், பிறகு கஷ்டப்படாமல் ஜீவிக்கலாம். அப்படி வாசியாதவர்கள் யாவதாயுஸ்ஸூம் தங்களுடைய எல்லா அவயவங்களையும் கஷ்டப்படுத்தித் தான் ஜீவிக்க வேண்டுமென்றவாறு.]

இதி ஸம்ஸ்க்ருத த்ருதீயவாசே ப்ரத²மஸம்வாத³꞉.

அத² த்³விதீய꞉ ஸம்வாத³꞉.

2 - கு³ருஶிஷ்யயோ꞉ ஸம்வாத³꞉.

இரண்டாம் ஸம்வாதம்.

குருவுக்கும் சீஷனுக்கும் ஸம்பாஷணை.

கு³ரு꞉—வத்ஸ! தத்ர கிம் கரோஷி.

குரு:— அடாசாம! அங்கு என்ன செய்கிறுய்.

ஶிஷ்ய꞉—ஸ்வாமிந் தூஷ்ணீம் ப⁴வாமி.

சிஷ்யன்:— சுவாமீ ஒன்றும் செய்யாமல் இருக்கிறேன்.

கு³ரு꞉—நைவம் ஸ்தா²தவ்யம் ந்யாய்யம். பா³ல்ய ஏவ வித்³யாம் ஸம்பாத³யேத். அத꞉ ஸம்யக் வித்³யாம் ஸம்பாத³யஸி கிம்.

கு. இப்படி இருப்பது நன்றன்று. சிறு பிராயத்திலேயே எண்ணும் எழுத்தும் கற்க வேண்டு மல்லவா? ஆகையால் நன்றாகப் படிப்பாயா?

ஶிஷ்ய꞉—கு³ரோ! பா³லாநாம் வித்³யாப்⁴யாஸே கோ நாம லாப⁴꞉ ஸ்யாத்.

சி. ஓ குருவே! சிறுவர்க்கு வித்தை கற்பதினல் என்ன பயன் உளது.

குரு:—ஶிஷ்ய! கிம் ப்ரு[illegible]

கு. சிஷா! என்ன வினவுகிறாய்?

குரு:— மூடோऽபி ஏவம் ந ப்ருச்சதி. அதாபி ஶ்ருணு வக்ஷ்யாமி, இதம் தே ஹிதம்.

கு. மூடனும் இப்படி கேட்க மாட்டான். ஆகிலும் கேள் சொல்லுகிறேன் இது உனக்கு நன்று.

ஶிஷ்ய:—தாத! ஹிதம் இதி யதுக்தம் தத் கிம்.

சி. அய்யா! இதம் என்று உங்களால் கூறப்பட்டதானதுவோ? அது என்ன?

குரு:—ஸௌம்ய! இஹ பரத்ர ச ஆத்மரக்ஷணாய ஈஶ்வரேண யத்யதுத்பாதிதம் தத்ஸர்வம் மாநவாநாம் ஹிதமித்யுச்யதே. தத் தே வக்ஷ்யே.

கு. சாம! இவ்வுலகத்திலும் மற்ற உலகங்களிலும் ஆத்மாவை இரக்ஷிப்பதற்குக் கடவுளால் எது எது உண்டாக்கப் பட்டதோ அவை எல்லாம் மனிதர்க்கு நலமெனச் சொல்லப்படுகின்றன. அவற்றை உனக்குச் சொல்லுகிறேன்.

ஶிஷ்ய:—ஜ்ஞாநத! க்ருபயா தத்திதம் உபதேஷ்டுமர்ஹஸி.

சி. ஞான மளிப்பவரே! ஆகில் அவ்விதத்தை நீர் நமக்குபதேசிக்க வேண்டும்.

குரு:—அரே! கிமர்த்தம் திஷ்டஸி, உபவிஶ.

கு. அடா! ஏன் நிற்கிறாய் இங்கு உட்காருவாயாக.

ஶிஷ்ய:—ஸ்வாமிந்! உபவிஶாமீத்யுக்த்வா குரும் நமஸ்க்ருத்ய உபவிஶ்ய ஸ்வாமிந்! அஹம் தே ஶிஷ்ய: ஶரணாகதம் மாம் ஸம்யக் ஶாதி.

சி. ஓ சுவாமி இங்கு உட்காருகின்றேன் என்று சொல்லி குருவை நமஸ்கரித்து உட்கார்ந்து ஓ ஸ்வாமீ! யான் உம்முடைய சிஷன் ஆனேன் சரணமடைந்த என்னை நன்றாகச் சிக்ஷிக்க வேண்டும்.

गुरुः—वत्स! प्रथमं गुरोः सन्निधौ शिष्येणैवं वर्तितव्यम्.

கு. குழந்தாய்! முதலில் குருவின் சமீபத்தில் சிஷியர் இவ்வாறிருக்க வேண்டும்.

(1) उषस्यवबोधः.

(1) பின் மாலையில் கண் விழித்தல்.

(2) ततो गुरुं नत्वा तदाज्ञानुवर्तनम्.

(2) பின்பு குருவை நமஸ்கரித்து அவரது கட்டளைப்படி இருத்தல்.

(3) प्रातरनुष्ठानक्रिया.

(3) காலைக் கருமங்களை முடித்தல்.

(4) पित्रोर्देवताविश्वासः.

(4) தாய் தந்தையரிடம் தேவதா விசுவாஸமும்.

(5) मनोवाक्कायानामेकतयावस्थानम्.

(5) மனம், வாக்கு, உடல் இவை ஒரே மாதிரியாக இருத்தல்.

(6) शुद्धवस्त्रधारणम्.

(6) சுத்தமான வஸ்திரம் தரித்தல்.

(7) विश्वासेन विद्याभ्यासः.

(7) ஆவலுடன் கல்வி கற்கை.

(8) स्वस्ववर्णोचितकर्मानुष्ठानम्.

(8) தந்தாம் வகுப்புக்குத் தக்க கருமங்களைச் செய்தல்.

(9) क्रोधादीनां निबर्हणम्.

(9) கோபம் முதலியவற்றை அடக்குதல்.

(10) दुस्संसर्गवर्जनपूर्वकं सत्सङ्गविधानम्.

(10) துஷ்டருடன் கூடுவதை விட்டு நல்லோருடன் கூடுதல் செய்கை.

(11) भोजननियमः.

(11) சாப்பாட்டின் அளவு.

(12) परहिंसात्यागः.

(12) பிறரை வதைக்கச் செய்வதை விடுகை.

शिष्यः—सर्वं अद्यप्रभृति विशेषेण प्रयत्नेनैतान् उषस्यवबोधादीन्, तं [illegible].

சி. இவ்வாறு பன்னிரண்டு விடயங்களில் முதலாகச் சொல்லப்பட்ட காலைக்கண் விழிப்பதென்பது யாது? அதை தேவரீர் விவரித்துரைக்க வேண்டும்.

குரு:—ஸௌம்ய! ராத்ரௌ பஞ்சவிம்ஶதி கடிகாஸ உபரி ஸூர்யோதயாத் ப்ராக் ய: பஞ்சகடி காலஸ்திஷ்டதி ஸ கால: ஸ ஏவ உஷ:கால இதி கால விதோ வதந்தி, தஸ்மிந்நேவ காலே யே ப்ரபுத்யந்தி தேஷாம் ஜ்ஞாநம் தீக்ஷ்ணதரம் ஸ்யாத் தத ஏவாஷ்டாங்க ஸம்யுக்தா புத்திர்பவதீதி. ஶாஸ்த்ரேஷு கதிதம். க்ரஹணம் தாரணம் சைவ ஸ்மரணம் ப்ரதிபாதநம், ஊஹாபோஹார்த்த விஜ்ஞாநம் தத்வஜ்ஞாநஞ்ச தீகுணா: இதி.

கு. சாம! இராத்திரி 25 நாழிகைக்கு மேல் சூரியோதயத்திற்கு முன் யாது ஐந்து நாழிகை அளவுள்ள காலமோ, அதுவே விடியக் காலமெனக் காலமறிபவர் கூறுகின்றனர். அக்காலத்திலேயே எவர் கண் விழிக்கின்றார்களோ? அவர்கட்கு ஞானம் மிகக் கூர்மையுள்ளதாகும். அக்காரணத்தைப் பற்றியே எட்டு அங்கங்களுடன் கூடியதாகி வலிவு பெறுமெனப் புத்தி சாத்திரத்திற் சொல்லப்பட்டது. சொல்லை வாங்கிக் கொள்வதும், க்ரஹித்ததைத் தரிப்பதும், தரித்ததை ஸமயத்தில் நினைப்பதும், நினைத்ததை வெளிப்படுத்துவதும் அநுகூலத்தை சேர்ப்பதும் விரோதமானதை நீக்குதலும் விசேஷத்தை அறிதலும் உண்மைப் பொருளுணர்தலும் இவை புத்தியின் குணங்கள் என்று.

ஶிஷ்ய:—கிமுக்த ஶ்லோகஸ்யார்த்தம் பூர்வேண மம் தத் ஸார்த்தஜ்ஞம் குருதே. கிம்?

சி. முன் சொன்ன சுலோகத்திற்கு அர்த்தம் சொல்லி என்னை அந்த சுலோகார்த்தம் அறிந்தவனாகச் செய்வீராக.

குரு:—ஸௌம்ய! ப்ரதமம் இமம் ஶ்லோகம் ஸம்யக் பாடயித்வா ததஸ்தஸ்யார்த்தம் வக்ஷ்யாமி.

கு. சாம! முதலில் இந்த சுலோகத்தை நன்றாக உருப்போட்டு அதன் மேல் அந்த சுலோகத்தின் பொருளைச் சொல்லுகிறேன்.

ஶிஷ்ய:—ததாஸ்து, இதி தம் ஶ்லோகம் பாடயதி.

சி. ஆமாம். என்று அந்த சுலோகத்தை உருப்போட்டான்.

குரு:— ஆயுஷ்மந்! தம் ஶ்லோகம் பாடயிதும் ஶக்நோஷி?

கு. ஆயுளுள்ளவனே! அந்த சுலோகத்தை வரச் செய்தாயா?

ஶிஷ்ய:— பகவந்! ததைவாகரவமிதி தம் ஶ்லோகம் படதி.

சி. பகவானே! அப்படியே செய்தேன் என்று சொல்லி அந்த சுலோகத்தைச் சொல்லுகிறான்.

குரு:— வத்ஸ! யத்யபி தே ஶ்லோகோ வாசோவிதேய ஆஸீத். ததாபி உச்சாரணமாத்ரம் ஸ்பஷ்டம் நாஸீத். உச்சாரணவிஷயே த்வம் ஸம்யக் ஶிக்ஷணீயோஸி.

கு. குழந்தாய்! உனக்கு சுலோகம் பாராமற் சொல்ல வசப்பட்டது. ஆகிலும் சொல் மாத்திரம் தெளிவாக இல்லை. சொல் விஷயத்தில் நீ நன்றாகத் திருத்தல் செய்யப்பட வேண்டியவனாகிறாய்.

ஶிஷ்ய:— ஓம். அர்த்தஜ்ஞாநாநந்தரம் ஸ்பஷ்டோச்சாரணம் ஸம்பவதீதி மந்யே. தஸ்மாத் ஶ்லோகார்த்தம் வ்யாகரோது பவாந் இதி ஸம்ப்ரார்த்ய ஸாவதாநஸ்திஷ்டதி.

சி. ஆம். பொருளறிந்த பின் தெளிவாகச் சொல்லுண்டாகுமென்று எண்ணுகிறேன். ஆகையால் நீங்கள் சுலோகத்தின் அர்த்தத்தை விவரித்துச் சொல்ல வேண்டும். என்று வேண்டிக்கொண்டு கவனிப்புடனிருக்கிறான்.

குரு:— சிரஞ்ஜீவிந்! க்ரஹணம் நாம குருணோக்தாநாமர்த்தாநாம் ஸாபிலாஷ ஶ்ரவணேந தாநர்த்தாந் ஸ்வபுத்தாவாரோபணம்.

கு. சிரஜீவீ! கிரகணமாவது—குருவினுற் சொல்லப்பட்ட பொருள்களை பேராவலுடன் கேட்டு அந்தப் பொருள்களைத் தன் புத்தியிலேற்றுகையாகும்.

ஶிஷ்ய:— ஸ்வாமிந்! மே புத்தே: க்ரஹண ஶக்திரஸ்தீதி மந்யே. ததஸ்தி ந வேதி பவாந் பரீக்ஷதாம் பவாந்.

சி. சுவாமீ! என் புத்திக்கு கிரகிக்கும் சக்தி யுண்டென்று எண்ணுகிறேன். (ஆதலால்) அது உண்டா? இல்லையா வென்று பரீக்ஷியுங்கள் நீங்கள்

𑌗𑍁𑌰𑍁𑌃—𑌬𑌾𑌲! 𑌏𑌤𑌾𑌵𑌤𑌾 𑌕𑌾𑌲𑍇𑌨𑌾𑌹𑌂 𑌯𑌦𑌵𑌾𑌦𑌿𑌷𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌪𑌿 𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾.

கு. சிறுவனே! இவ்வளவு காலமாக நான் எதைச் சொன்னேனோ அவை எல்லாம் உன்னால் கிரகிக்கப் பட்டதா?

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃—𑌤𑌾𑌤! 𑌭𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌪𑍍𑌯𑌵𑌗𑌤𑌵𑌾𑌨𑌸𑍍𑌮𑌿. 𑌯𑌦𑌿 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑌸𑌿 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌸𑌨𑍍𑌨𑌦𑍍𑌧𑍋𑌽𑌸𑍍𑌮𑌿.

சி. அய்யா! தங்களால் சொல்லப்பட்டவை யாவும் அறிந்தவனாகிறேன். மறுபடிச் சொல்லக் கட்டளை யிடுவீராகில் அவை எல்லாவற்றையும் சொல்லச் சித்தமா யிருக்கிறேன்.

𑌗𑍁𑌰𑍁𑌃—𑌵𑌤𑍍𑌸! 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌵𑌶𑍍𑌯𑌕𑍀. 𑌏𑌤𑌾𑌂 𑌕𑌥𑌾𑌂 𑌶𑍃𑌣𑍁. 𑌤𑍍𑌵𑌦𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌯𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌕𑌥𑌾𑌯𑌾𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨𑌾𑌨𑍍 𑌪𑍃𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌯𑌦𑌿 𑌤𑌦𑌾 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌂 𑌦𑍇𑌹𑌿. 𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌥𑌾𑌂 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌾𑌰𑍇𑌭𑍇.

கு. பிள்ளாய்! இப்பொழுது அதைச் சொல்ல வேண்டாம். இந்த கதையைக் கிரகித்துக் கொள். உன்னால் கிரகிக்கப்பட்ட அக் கதையில் யான் கேள்விகளைக் கேட்கின்றேனாகில் அச்சமயம் அவற்றிற்கு விடைகொடுப்பாயாக. என்று சொல்லி கதையைச் சொல்லத்தொடங்கினர்.

𑌵𑌤𑍍𑌸! 𑌶𑍃𑌣𑍁 𑌉𑌤𑍍𑌤𑌰𑌸𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌹𑌾𑌸𑍍𑌤𑌿𑌨𑌂 𑌨𑌾𑌮 𑌨𑌗𑌰𑌮𑌸𑍍𑌤𑌿.

பிள்ளாய்! கேள் வடக்கு திக்கில் "அத்தினம்" எனப்பெயர் பெற்ற நகர் இருக்கின்றது.

𑌤𑌤𑍍𑌰 𑌶𑌶𑌿𑌵𑌂𑌶𑍋𑌦𑍍𑌭𑌵𑌾𑌃 𑌰𑌾𑌜𑌾𑌨𑍋 𑌬𑌹𑍋𑌃 𑌕𑌾𑌲𑌾𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌯𑍋𑌰𑍇𑌵 𑌨𑌿𑌰𑌤𑌾𑌃 𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌪𑌾𑌲𑌯𑌾𑌞𑍍𑌚𑌕𑍍𑌰𑍁𑌃. 𑌤𑍇 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌃 𑌕𑍌𑌰𑌵𑌾𑌃 𑌇𑌤𑌿 𑌨𑌾𑌮𑍍𑌨𑌾 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌬𑌭𑍂𑌵𑍁𑌃.

ஆங்குச் சந்திரவம்சத்திற் பிறந்த அரசர் வெகு காலமாகச் சத்தியத்திலும் தருமத்திலும் ஊக்க முள்ளவர்களாக இருந்தவராய் பூமியைப் பரிபாலித்து வந்தனர். அவர்கள் ஓர் காலத்தில் பாண்டவர் என்றும், கௌரவர் என்றும், பெயரில் பிரசித்தி பெற்றவராய் இருவகையாக இருந்தனர்.

ஶிஷ்ய:— ஸ்வாமிந்! தே ராஜாந: கேந காரணேந த்விதா பூதா: காரணமஸ்தி சேத் ஶ்ரோதுமிச்சாமி.

சி. சுவாமீ! அந்த அரசர் எந்த காரணத்தால் இரண்டு வகையாக ஆயினர்? காரண முண்டாகில் கேட்க விரும்புகிறேன்.

குரு:— ஸாது வத்ஸ! த்வயா ஸம்யக் ப்ருஷ்டோஸ்மி. மம மோதோ மஹாந் ஸஂஜாத:.

கு. அடா சாம! உன்னால் நன்றாக வினவப்பட்டேன். எனக்கு மிகச் சந்தோஷ முண்டாயிற்று.

தத்காரணம் ஸாவதாநம் ஶ்ருணு.

அக்காரணத்தை கவனிப்புடன் கேட்பாயாக.

ஶிஷ்ய:— ஶ்ரத்தாவாநஸ்மி அநுக்ருஹ்ணீஷ்வ.

சி. சிரத்தை யுள்ளவனாகிறேன் அருள் புரிய வேண்டும்.

குரு:— வத்ஸ! சந்த்ரவம்ஶோத்பவ: ப்ரதீப நாமகோ மஹீபதி ராஸீத்.

கு. சந்திர வம்சத்தில் பிறந்த பிரதீபனெனப் பெயருள்ள ஓர் அரசன் இருந்தனன்.

தஸ்ய ஸ்வபத்ந்யாம் ஸுநந்தாயாம் த்ரய: புத்ரா ஜஜ்ஞிரே. தேவாபி: ஶந்தநு: பாஹ்லீகஶ்ச. தேஷு மத்யமஸ்ய ஶந்தநோரேவ ஸந்ததிர்ஜாதா.

அவனுக்குத் தன் மனைவியாகிய (சுனந்தி) என்பவளிடம் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். (1) தேவாபி (2) சந்தனு (3) பாஹ்லீகன் என்றும்பெயர். அவர்கள் மூவரில் நடுவிற் பிள்ளையாகிய சந்தனு என்னும் ஒருவனுக்குச் சந்தான முண்டாயிற்று.

தஸ்ய த்வே பார்யே ஆஸ்தாம் தயோர்ஜ்யேஷ்டா கங்கா கநிஷ்டா ஸத்யவதீதி, கங்காயாம் ஶந்தநோர்ஜாதௌ தநயௌ தேவவ்ரத பீஷ்ம நாமாநௌ.

அவ்வரசனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனர். அவ்விருவரில் மூத்தவள் கங்கை யென்பவள். இளையவள் சத்தியவதி என்பவள். கங்கையிடம் சந்தனுவுக்குப் பிறந்த பிள்ளைகள் இருவர் அவர்கள் தேவ விரதனென்றும் பீஷ்மனென்றும் பெயருள்ளவர்.

அநந்தரம் ஸத்யவத்யாம் காநீநோ வ்யாஸ நாமா. அநந்தரம் ஸா பித்ருகுலாத் சித்ராங்கத விசித்ரவீர்ய நாமாநௌ ஸுதௌ லேபே. தத: ஸந்தநோ: பஞ்சபுத்ரா ஆஸந்.

மற்றொருத் தியாகிய ஸத்தியவதியிடம் அவளது கன்னிகைப் பருவத்திற் பிறந்தவன் வியாஸ னெனப் பெயருள்ளவன். பிறகு அவள் சித்திராங்கதன் விசித்திர வீர்யன் எனப் பெயருள்ள இரண்டு பிள்ளைகளைப் பெற்றனள். ஆகையால் சந்தனுவுக்கு ஐந்து புத்திரர் இருந்தனர்.

வத்ஸ! தேவவ்ரதஸ்து அல்பாயுஷ்க:. காங்கேயோ பீஷ்ம: ப்ரஹ்மசர்ய வ்ரதநைஷ்டிக:. த்விதீயோ வ்யாஸ: ஸ்வஜநந்யநுஜ்ஞயா வாநப்ரஸ்தாஶ்ரமம் ப்ராப்ய தபஶ்சசார.

குழந்தாய்! தேவ விரதனுகில் அற்பமான ஆயுள் உள்ளவனுன். கங்கையின் புத்திரனுகிய பீஷ்மன் சிறு பிராயம் முதல் பிரம்மசர்ய மென்னும் விரதத்தைச் செய்தனன். இரண்டாவனை வியாஸன் தன் அன்னையின் அனுமதியால் (வானப் பிரஸ்தம்) என்னும் ஆசிரமத்தைப் பெற்று (வனத்தில்) தவம் செய்தனன்.

சித்ராங்கதோ நிஸ்ஸந்தாந ஏவ காலகதிம் அவாப.

சித்திராங்கதன் சந்தான மின்றியே காலகதி அடைந்தனன்.

அநந்தரம் கநிஷ்டோ விசித்ரவீர்ய ஏவ ராஜாபவத். ஸ ஸத்யம் தர்மஞ்ச பரமாம் கதிம் மத்வா ஜநாந் ஸ்வபுத்ராநிவ ரரக்ஷ. தஸ்ய அம்பிகா அம்பாலிகேதி த்வே பத்ந்யௌ ஆஸ்தாம். தயோரபி தஸ்ய ஸத்புத்ராதர்ஶநாத் மாதா ஸத்யவதீ ஸமசிந்தயத்.

பின்பு இளையவனுன விசித்திர வீரியன் என்பவனே அரசனுயினன் அவன் ஸத்தியத்தையும் தருமத்தையும் தனக்குப் பரம கதியெனக் கொண்டவனுகி ஜனங்களைத் தன் புத்திரரைப் போல் இரக்ஷித்து வந்தனன். அவனுக்கு அம்பிகை அம்பாலிகை என இரண்டு மனைவிகள் இருந்தனர். அவ்விருவரிடத்திலும் அவனுக்கு நற்புத்திரரைக் காணுமையால் அன்னையாகிய ஸத்தியவதி சிந்

விஸன முற்றவளாயினள். பின்பு அவள் மூத்த மைத்துனனால் புத்திரனைப் பெறுதலாகிய அக்காலத்திய நீதியை நினைத்தவளாய் தன் புத்திரனாகிய வியாஸ பகவானை நினைத்தனள். நினைத்த அக்கணத்திலேயே அவன் வந்து சேர்ந்தனன்.

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 — 𑌭𑌗𑌵𑌨𑍍! 𑌕𑌥𑌮𑌿𑌦𑌂 𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 𑌵𑍍𑌯𑌾𑌸𑍋 𑌵𑌨𑌂 [illegible] 𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌜𑍍𑌞𑌤𑌾 𑌕𑌥𑌮𑍍.

சி. பகவானே! எப்படி இது சரிப்படுகின்றது? வியாஸன் சென்றானென்றீரல்லவா? தூரத்திலிருப்பவனுக்கு அவள் நினைவை அறியதெப்படி?

𑌗𑍁𑌰𑍁𑌃 — 𑌵𑌤𑍍𑌸! 𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌰𑍇𑌵𑌂 𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇, 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑌾 𑌮𑌨𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑌂𑌪𑌾𑌦𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮. 𑌮𑌨𑌶𑍍𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌯𑍋𑌗 𑌇𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑌤𑍇.

கு. குழந்தாய்! முனிவர் இவ்வாறிவர். அவர்கள் பிராணயாமத்தின் மஹிமையால் மனதுக்குச் சத்தியை சம்பாதித்தார்கள். மனதின் சத்தியே யோகமென்று சொல்லப்படுகிறது.

𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌶𑍍𑌵𑌾𑌸𑌵𑌾𑌯𑍁𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑌨𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑍍𑌯 𑌬𑌹𑌿𑌰𑍍𑌨𑌿𑌸𑍍𑌸𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿. 𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌬𑌲𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿. 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌤𑍇

யோகிகள் மூச்சாகிய காற்றை சாஸ்திரத்திற் கூறியவாறு உள்ளடக்கி வெளி விடுகின்றார்கள். அவ்வாறாகிய பிராணயாமத்தின் பலத்தால் ஞான சக்தியுண்டாகின்றது. ஞான சக்தியால் எல்லாம் அறியப்படுகின்றன.

𑌅𑌤𑌃 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑍍𑌤𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌮𑌾𑌤𑍁𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌿𑌤𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑌾𑌨𑌾𑌸𑍀𑌤𑍍.

ஆகையால் வியாஸன் அப்படிப்பட்ட ஞான சக்தியால் தன் அன்னையின் நினைவை அறிந்தவனாயினன்.

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 — 𑌆𑌰𑍍𑌯! 𑌅𑌤𑍀𑌵 𑌵𑌿𑌸𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿. 𑌏𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌪𑌿 𑌶𑍍𑌰𑍋𑌤𑍁𑌂 𑌕𑍌𑌤𑍂𑌹𑌲𑌂 𑌭𑌵𑌤𑌿. 𑌤𑌥𑌾 [illegible] 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿. 𑌇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌤𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌕𑌥𑌯.

சி. அய்யா! எனக்கு மிக ஆச்சரியமுண்டாயிற்று. இதன் விசேஷமெல்லாவற்றையும் கேட்க விருப்பமுற்றவனாகிறேன்,

ஆகிலும் பிறகு அருள் செய்வீராக வேண்டும். இப்பொழுது முந்திய கதையைச் சொல்வீர்களாக.

ஸூத:— வத்ஸ! வ்யாஸபகவாநாகத்ய ஸ்வமாதரம் நமஸ்க்ருத்ய தஸ்யா: புரோ விநீதஸ்திஷ்டந் ஜநநி! அஹம் கிங்கரோஸ்மி கர்தவ்யமஸ்தி சேத் க்ரியதாமிதி மாம் நியுங்க்ஷ்வ. இதி வ்யஜிஜ்ஞபத்.

சூ. குழந்தாய்! வியாஸ பகவான் வந்து தன் அன்னையை வணங்கி அவளின் முன்பு வணக்கத்துடன் நின்றவராய் தாயே! யான் கிங்கரனாக இருக்கின்றேன். வேலை யுண்டாகில் "செய்யப்பட வேண்டும்" என்று என்னை நியமிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தனன்.

தச்ச்ருத்வா ஸத்யவதீ தநயம் வீக்ஷ்ய வத்ஸ! தவாநுஜஸ்ய விசித்ரவீர்யஸ்யாபி வம்ஶகர: ஸந்தாநோ நாபவத். அதஸ்ஸகலலக்ஷ்மீஸம்பந்நாபி ந துஷ்டாஸ்மி. ப்ரஜயா ஹி மநுஷ்யா: பூர்ணா இதி ப்ரஜாபாவேந அபூர்ண இத்யஹம் அஹர்நிஶம் அநித்ரா பவாமி. இத்யுக்த்வா ஸா ருரோத. ததைநம் ரோதமாநாம் ஸ்வமாதரம் வீக்ஷ்ய பரது:கா ஸஹிஷ்ணுதயா மாத்ருபக்த்யா ச அம்ப! மா ரோதீ: தைவகதிர்விஷமா ஏவம் மர்த்யாநாம் ஸம்பவதி கலு.

அவ்வார்த்தையைக் கேட்டு ஸத்தியவதி மகனைப் பார்த்து குழந்தாய்! உன் தம்பியாகிய விசித்திரவீர்யனுக்கும் வம்ச விருத்தி செய்யும் புத்திரன் உண்டாகவில்லை. ஆனதால் எல்லாச் செல்வமுள்ளவளாகினும் (நான்) ஸந்தோஷிக்கவில்லை. (புத்திரனுலல்லவா மனிதர் பூரணர்) என்று புத்திரனில்லாமையால் பூரணனல்லனென்று நான் அல்லும் பகலும் நித்திரை அற்றவளாய் இருக்கின்றேன். என்றுரைத்து அவள் அழுதனள். இவ்வாறு அழுகின்ற தன் தாயை நோக்கி பிறர் துக்கம் பொருக்க மாட்டாமையாலும் தாயிடம் பக்தியாலும் அம்மா! அழ வேண்டாம் தைவத்தின் கொடுமையா லிவ்வாறு மனிதர்க் குண்டாகின்ற தல்லவா?

அவஶ்யம் பவிதவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம்; நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி இதி.

(இது) கூறப்பட்டுளது. (ஒருவரால்) செய்யப்பட்ட நல்வினை தீவினைகள் (செய்தவரால்) அனுபவிக்கத் தக்கவையே. அனுபவிக்கப்படாத கருமம் கற்பத்தின் நூறு கோடி காலத்தாலும் குறையாது என்று.

[illegible]

ஆனதால் துக்கிக்க வேண்டாம் என்று இவ்விதம் முதலான நல் வார்த்தைகளால் தேறுதல் செய்யப்பட்டவளாயினும் தாய் மனதின் தேறுதலை அடையவில்லை. பின்பு அவள் புத்திரனைப் பார்த்து நீயே வம்சத்தைச் செய்பவனாக வேண்டுமெனக் கட்டளை தந்தனள். அவன் அந்த தாயின் சொல் கேட்ட மாத்திரத்தால் வெறுத்தவனாயினும் அன்னையின் கட்டளை மீறிய குற்றத்தை நினைத்தவனாகி, தாயே! எதைக் கட்டளை செய்கிறீரோ அக்காரியத்தை அப்படியே செய்கிறேன் என்று வருத்தத்துடன் சம்மதித்தனன்.

[illegible]

பிறகு அந்த ஸத்தியவதி புத்திரன் வார்த்தையைக் கேட்டு ஆலோசித்து குழந்தாய்! உடன் பிறந்தவனுடைய மனைவியிடம் உனக்குச் சரியான புத்திரனை பெறக் கடவாயென்று வருந்தச் செய்யப்பட்டவனாகி அம்பிகையிடம் ஓர் புத்திரன் குருடனானவனைப் பெற்றனன்.

[illegible]

சி. ஸ்வாமீ! பகவானாகிய வியாஸரின் பிரஸாதத்தாற் பிறந்த புத்திரன் எந்த காரணத்தால் பிறவிக் குருடனாகப் பிறந்தனனோ அக்காரணத்தைக் கேட்க விருப்ப முள்ளவனாகிறேன், என்றால் கேட்க அது தக்கதென எண்ணுவீராகில் அதனால் என்னைச் செவியுறச் செய்ய வேண்டும்.

குரு:—ஆயுஷ்மந்! அவக்தவ்யம் கிமஸ்தி. தேவரஹஸ்யமேவ அவக்தவ்யமிதி புராவிதோ வதந்தி. அதோ வக்ஷ்யாமி ஶ்ரோதவ்யே அவஹிதோ பவ.

கு. பூரண ஆயுளுள்ளவனே! சொல்லத் தகாதது யாதிருக்கின்றது? தேவ இரகசியம் மாத்திரம் சொல்லத் தகாதென்று பூருவ சரித்திர மறிபவர் சொல்வார். ஆனதால் சொல்லுகின்றேன். கேட்பதற்கு கவனிப்புள்ளவனாக இரு.

வத்ஸ! அம்பிகா து க்ஷிதீஶ துஹித்ருதயா ஸ்வதேவரம் தபஸ்விதயா பீஷணவேஷம் த்ருஷ்ட்வா பீதா ஸதீ ஸம்போக ஸமயே ஸ்வநேத்ரே ந்யமீலயத். தேந ஜாத: புத்ரோ [illegible]. தஜ்ஜாதம் தநயம் வீக்ஷ்ய ஸத்யவதீ அயம் அந்ததயா ராஜ்யாநர்ஹ இதி ஶோகார்ணவே மமஜ்ஜ. அத ஸா ஶோகஸ்யாபார மப்ராப்தா வத்ஸ! நாயம் ராஜ்யார்ஹ: யதயம் ஜாத்யந்த: அஸ்மின் நா ராஜாநோ ந பவந்தீதி நீதிஜ்ஞா ஆஹு:. [illegible]

சிறுவனே! அம்பிகையானவள் அரசன் புத்திரியாகையால் தன் மைத்துனனை தபஸ்வியானதால் பயங்கரமான உருவ முள்ளவனாகப் பார்த்து பயந்தவளாய் புணருங்கால் தன்னிரண்டு நேத்திரங்களையும் மூடிக் கொண்டனள். அக்காரணத்தால் பிறந்த புத்திரனும் குருடனாயினன் அவன் மேல் பிறந்த குழந்தையைப் பார்த்து ஸத்தியவதியானவள இவன் குருடனாகையால இராஜ்யத்திற்குத் தகாதவனென்று துன்பக்கடலில் அமிழ்ந்தனள். பின்பு அவள் துன்பத்தின் கரை அடையாதவளாய் குழந்தாய்! இவன் ராஜ்யத்துக்குத் தகுந்தவனன்று. எக்காரணதாலிவன் பிறவிக்

குருடனே? அங்கம் குறைந்தவர் அரசர் ஆக மாட்டார்கள் என்று நீதியறிபவர் சொல்வார்கள். ஆகையால் மற்றோர் பிள்ளையைப் பெற வேண்டும் பெற வேண்டுமென்று பல வகையில் வருந்தச் செய்யப்பட்டவராய் வியாஸன்தன்னை நிந்தித்துக்கொண்டவனாகவே அன்னையின் சொல்லைத் தவிருவதில் சக்தியற்றவனாகிய மற்றோர் மனைவியாகிய அம்பாலிகையிடம் பெறுவதற்குச் சம்மதித்தனர்.

𑌅𑌮𑍍𑌬𑌾𑌲𑌿𑌕𑌾𑌪𑌿 𑌭𑍀𑌤𑌾 𑌸𑌤𑍀 𑌧𑌵𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌯 𑌤𑍇𑌨 𑌸𑌂𑌗𑌤𑌾𑌸𑍀𑌤𑍍. 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌤𑌃 𑌕𑍁𑌮𑌾𑌰𑌃 𑌪𑍂𑌰𑍍𑌣𑍋𑌽𑌪𑌿 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑍋𑌽𑌭𑍂𑌤𑍍.

அம்பாலிகையும் பயந்தவளாகி வெளுத்த வஸ்திரத்தினால் தன்னை மூடிக்கொண்டு அவருடன் கூடினாள். அதனால் அவளிடம் பிறந்த குமாரன் பூர்ணமாயிருக்கினும் பாண்டுநிறமுள்ளவனானான்.

𑌸𑌤𑍍𑌯𑌵𑌤𑍀 𑌤𑌂 𑌶𑌿𑌶𑍁𑌮𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑌤𑌯𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯 𑌅𑌯𑍇! 𑌵𑍍𑌯𑌾𑌸! 𑌕𑌿𑌮𑍇𑌵𑌮𑌕𑌰𑍋𑌃 𑌨𑌾𑌯𑌂 𑌰𑌾𑌜𑌪𑌦𑌾𑌰𑍍𑌹𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌮𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌂 𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌯𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑍀𑌤𑌿 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 𑌬𑌲𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑍋𑌽𑌤𑌿𑌲𑌜𑍍𑌜𑌯𑌾𑌵𑌨𑌤𑌵𑌦𑌨𑍋 𑌯𑌦𑌾𑌸𑍍𑌤𑍇 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌸𑌾 𑌅𑌮𑍍𑌬𑌾𑌲𑌿𑌕𑌾 𑌸𑍍𑌵𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌿𑌕𑌾𑌂 𑌰𑍂𑌪𑌯𑍌𑌵𑌨𑌶𑌾𑌲𑌿𑌨𑍀𑌂 𑌸𑍍𑌵𑌸𑌮𑍀𑌪𑍇 𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌜𑌾𑌯𑍇 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌶𑍍𑌚 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌿𑌵 𑌤𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑌯𑌾𑌮𑌾𑌸. 𑌵𑌿𑌪𑍍𑌰𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍀 𑌸𑌾 𑌦𑌾𑌸𑍀 𑌸𑌾𑌨𑌨𑍍𑌦𑌮𑌭𑌵𑌤𑍍. 𑌵𑌤𑍍𑌸! 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌧𑌿𑌃 𑌸𑌮𑌵𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌗𑍁𑌣𑌃 𑌶𑌰𑍀𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌕𑌲𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑍀 𑌭𑌵𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑍁𑌰𑌾𑌖𑍍𑌯𑌃 𑌜𑌨𑌿𑌮𑌵𑌾𑌪.

ஸத்தியவதி அந்தக் குழவியைக் கண்டனள். பாண்டுவாக இருக்கு மக்குழவியை அறிந்து அடா! வியாஸ! ஏன் இப்படிக் குச் செய்தாய்? இவன் அரசர் பதத்திற்குத் தக்கவனன்று ஆனதால் அவளிடமே மற்றோர் புத்திரனைப் பெறுவதற்குத் தகுவாய் என்று தாயால்கட்டாயம் செய்யப்பட்டவனாகி மிக வெட்கத்தால் கவிழ்ந்த முகமுள்ளவனாக எச்சமயம் ஆயினனோ அதற்குள் அந்த அம்பாலிகைத் தன் வேலைக்காரி அழகு பருவம் உள்ளவளைத் தன்

னுடையதான ஆபரணங்களின் தொகையாலும் வஸ்திர விசேஷங்களாலும் அலங்கரித்து தன்னைப் போன்ற அவளை வியாஸரின் ஸன்னிதானத்திற்க்கு அனுப்பினாள். வெகுகாலமாக வியாஸரின் அருளை ஆசைப்படுகின்ற அந்தவேலை செய்பவள் நல்ல மனமுள்ளவளாயினள். குழந்தாய்! அவளிடம் வியாஸரின் அருளினால் ஞானத்திற்கு நிதியாயும் பகவானிடம் பக்தியுடன் கூடியவனாகவும், சமம், தமம், முதலிய எல்லா நற்குணங்களால் விளங்குகின்ற குழந்தை கிழக்கு திக்கில் சூரியன்போல் உண்டாயினன்.

अनन्तरं व्यासस्स्वजननी[illegible] शिशुर्दास्या[illegible] सुतः राज्यानर्ह इत्युक्त्वा वनं ययौ.

அதர்க்குமேல் வியாஸர் தன் தாயை வரவழைத்து இந்தக் குழவி தாசியிடம் பிறந்தவன் ஆகையால் இராஜ்யத்திர்க்குத் தகாதவனென்றுரைத்து வனத்திர்க்குச் சென்றார்.

अथ सा सुचिरं विचिन्त्य पाण्डुमेव राजानं मत्वा तान् त्रीनपि शिशूनपोषयत्.

பிறகு அவள் நெடுங்காலம் சிந்தித்து பாண்டுவையே அரசனாக எண்ணினவளாய் அந்த மூன்று குழந்தைகளையும் வளர்த்து வந்தனள்.

एवमोदनादिभिः पोषितास्सुखं लालिताश्च ते कुमारा दिने दिने त्रेताग्नय इवावर्धन्त. अग्रजोऽ[illegible] धृतराष्ट्रनामा. द्वितीयः पाण्डुनामा तृतीयो विदुर[illegible].

இவ்வாறு சோறு தண்ணீர் முதலியவற்றால் வளர்க்கப்பட்டும் சுகமாகக்கொண்டாடப்பட்டவருமான அந்தப் பிள்ளைகள் தினந்தோறும் த்ரேதை யென்ற மூன்றக்கினிகளைப்போல் விருத்தி அடைந்தனர். மூத்தவனான பிறவிக்குருடன் திருதராஷ்டனெனப் பெயருள்ளவன். இரண்டாவன் பாண்டு என்று பெயருள்ளவன், மூன்றாவதுள்ளவன் விதுரன் என்று பெயருள்ளவனானான்.

[illegible] त्रयः [illegible] सर्व विद्या विशारदाः [illegible] विचक्षणाः [illegible]

வளர்ந்தவர்களான அவர்கள் மூன்று புத்திரர்கள் சிறு பிராயத்தில் விளையாடுவதில் பிரியமுள்ளவராயினும் எல்லாக் கல்வியிலும் சமர்த்தராகி (தண்டநீதி) என்ற சாஸ்திரத்தில் சமர்த்தராய் இக்ஷ்வாகு வம்சத்தியவர்போல் இருந்தனர்.

𑌵𑌤𑍍𑌸! 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌿𑌤𑌾 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌬𑌾𑌲𑌾𑌨𑌾𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌰𑍍𑌵𑌣𑍀𑌵 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍋𑌽𑌵𑌰𑍍𑌧𑌤.

பிள்ளாய்! அவர்கட்குத் தந்தையாகிய விசித்திரவீரியன் அந்தப் பிள்ளைகளைப்பார்ப்பது பரிசிப்பது கட்டிக்கொள்வது முதலியவற்றால் கடல் பருவகாலத்திற்போல் களித்தனன்.

𑌅𑌥 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌭𑍂𑌪𑌤𑍌 𑌕𑌾𑌲𑌧𑌰𑍍𑌮𑌮𑍁𑌪𑍇𑌯𑍁𑌷𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌮𑍇𑌵 𑌰𑌾𑌜𑌾𑌨𑌂 𑌚𑌕𑍍𑌰𑍁𑌃.

பின்பு ஓர் காலத்தில் பூபதியாகிய (விசித்திரவீரியநாகவன்) காலகதி அடையுங் கால் பிரஜைகளெல்லோரும் பாண்டுவையே அரசனாக முடி சூட்டினர்.

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃—𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍! 𑌭𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌅𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌸𑍍𑌤𑌿. 𑌮𑍇 𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌸𑌂𑌶𑌯𑍋 𑌜𑌾𑌤𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑍁𑌲𑍇 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯𑍈𑌵 𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌭𑌿𑌷𑍇𑌕 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌯𑌮𑍋𑌸𑍍𑌤𑌿 𑌨 𑌵𑍇𑌤𑌿. 𑌤𑌂 𑌸𑌂𑌶𑌯𑌂 𑌛𑍇𑌤𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿.

சி. ஓ ஸ்வாமி! தங்களால் கூறப்பட்ட எல்லாக்கதையும் அர்புதமாக இருக்கின்றது. என் மனதில் பெரிய சந்தேகமுண்டாயிற்று. அரசரின் குலத்தில் மூத்தவனுக்கே முடி சூட்டுதல் என்று நியமம் உண்டா? இல்லையா? என்று அந்தச சந்தேகத்தைப்போக்கத்தக்கவராகிறீர்.

𑌗𑍁𑌰𑍁𑌃—𑌆𑌯𑍁𑌷𑍍𑌮𑌨𑍍! 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯𑍈𑌵 𑌮𑌕𑍁𑌟𑌧𑌾𑌰𑌣𑌮𑌿𑌤𑌿 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑌯𑌂 𑌨𑌿𑌯𑌮𑍋𑌽𑌦𑍍𑌯 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌸𑌤𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌨𑌿𑌯𑌮𑌃 𑌕𑌥𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍. 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍋 𑌜𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵𑌾𑌵𑌦𑌾𑌮 𑌕𑌿𑌲. 𑌤𑌤𑍍𑌸𑍍𑌮𑌰𑌸𑌿 𑌵𑌾? 𑌕𑌥𑌂 𑌹𑌿 𑌨𑌾𑌮 𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌂 𑌨𑌾𑌰𑍋𑌹𑌤𑍀𑌤𑌿.

கு. ஆயுளுள்ளவனே! மூத்தவனுக்கே மகுடம் தரித்தலென்று க்ஷத்திரியர்க்கு இந்த ஏற்பாடு விடத் தகாதாயினும் தடை

இருக்குமாகில் ஏற்பாடு எப்படி யுண்டு. மூத்தவன் பிறவிக் குருடனென்று பாண்டே சொன்னே னல்லவா! நினைக்கிறு யல்லையோ? அங்கம் குறைந்த அரசர் சிங்காசனம் ஏறமாட்டார்கள் என்று.

ஶிஷ்ய:—[illegible]

சி. இது நன்றாக யிருக்கின்றது. அதற்குமேல் அதற்குமேல்.

குரு:—[illegible]

கு. சிறுவனே! பாண்டுவோ பூமியைத் தருமம் தவறுமல் இரக்ஷித்தான். அவன் இரண்டு பெண்கள் குந்தீ, மாத்ரீ, என்பவர்களை விவாகம் செய்துகொண்டனன். பருவம் நிறம்பின அவர்களுடன் விவாஹம்செய்து சந்தோஷித்தான். இவ்வாறிருக்கையில் அவனுக்கு முனிவரின் சாபத்தால் அப் பெண்களிடம் சந்தான முண்டாகவில்லை. அதனுல் விசனமுற்ற மனமுள்ளவனுகி கஷ்டத்துடன் அவர்க ளிருவருடன் காடேறச் சென்றுன். அக்காலம் இராஜ்யம் அரசனற்றதாகப் பார்த்து திருதராஷ்டிரன் தானே அரசனுக ஆனுன்.

ஶிஷ்ய:—[illegible]

சி. ஸ்வாமி! பாண்டு முனிவரின் சாப முண்டாயிற்றென்று எந்த சங்கதி சொன்னீர்களோ? அந்த சாபம் யாது? எக்காரணத்தாலுண்டாயிற்று? அவை எல்லாவற்றையும் கேட்க விருப்பமுள்ளவனுக யிருக்கின்றேன்.

குரு:—[illegible]

கு. ஸாம! அக்கதையைக் கேட்பதற்கு விருப்பமுற்றவனு கிலும் அதைப் பிறகு சொல்லுகின்றேன். இப்பொழுது தர்ச் சமயக் கதையை அநுசரிப்போம்.

शिष्यः—भगवन्! यथाज्ञापयसि.

சி. பகவானே! எதைக் கட்டளை யிடுகிறீர்களோ (அதப் படியே).

गुरुः—वत्स! धृतराष्ट्रः स्वानुजस्य वानप्रस्थाश्रमं स्वस्य राज्यलाभञ्च विज्ञाय परं सन्तोषं प्राप्यापि पुत्रराहित्येन विषादमवाप.

கு. குழந்தாய்! திருதராஷ்டிரன் தன் தம்பியின் வானப்பிரஸ்தமென்னும் ஆசிரமத்தையும் தனக்கு இராஜ்யம் கிடைத்ததையும், எண்ணிநவனுகி மிகச் சந்தோஷத்தைப் பெற்றும், புத்திரனைப் பெருமையால் வருத்தமடைந்தனன்.

अथ कदाचित् दैवात् तस्यापि पुत्राणां शतं जज्ञे.

அதன் பிறகு ஓர் காலத்தில் தைவத்தின் அருளால் அவனுக்கு புத்திரர்கள் நூறு பிறந்தன.

शिष्यः—तात! वने निवसतः पाण्डोर्वृत्तं वक्तुमर्हसि.

சி. ஐய்யா! வனத்தில் வசிக்கின்ற பாண்டுவின் சரித்திரத்தைச் சொல்லத்தக்கவராகிறீர்.

गुरुः—वत्स! तदेतदवधारय. पाण्डुः [illegible] शरीर [illegible]. तदा तस्य प्रिया कुन्ती निजभर्तुः व्या[illegible] सहसा तं प्रोवाच. प्रिय! किं [illegible]? [illegible]. यद्य[illegible] इति [illegible].

கு. குழந்தாய் சாம! அப்படியே சொல்கிறேன் பாண்டு புத்திரனில்லாமல் கிழத்தனத்தால் தளர்ந்த சரீர முள்ளவனுகி வருத்தத்தால் கலங்கின மன முள்ளவனுனன். அச்சமயம் அவ்வரசனுடைய மனைவியாகிய குந்தீ பதிவிரதையானவளாய் தன்பர்த்தாவின் வருத்தத்தைக்கண்டு பொருக்கமாட்டாதவளாய் அவரை நோக்கிச் சொன்னுள். பிரியமானவரே! என் வருத்தப்படுகிறீர். கன்னியா யிருக்கையில் எனக்கு ஆறுகுணம் பொருந்தியவராகிய தூர்வாஸரின் அருளால் மந்திரமொன்றைப் பெற்றவளாகிறேன். அந்த மந்திரத்தின் மஹிமையால் அந்த தேவர்கள் புத்திரரைக் கொடுப்பார்களென்று அந்த முனிவர் என்னைக்குறித்துச் சொன்னுர். நியமனமுண்டாகில் அந்த மந்திரத்தினுல் இப்பொழுதே நற்புத்திரனுள்ளவராக ஆகுவீர் என்று விண்ணப்பம் செய்தனள்.

𑌸𑌮𑌾𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌿 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌸𑍍𑌸𑌂𑌤𑍁𑌷𑍍𑌟𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇! 𑌸𑌤𑍍𑌵𑌰𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌤𑍍𑌯𑌾𑌗𑍋𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂, 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌕𑌾𑌨𑍍𑌤𑍇𑌨𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑌾 𑌸𑌤𑍀 𑌕𑍁𑌨𑍍𑌤𑍀 𑌤𑌨𑍍𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑍍.

அந்த அரசன் அவளது அவ்வார்த்தையைக்கேட்டு மிக்க ஸந்தோஷத்தை அடைந்து, பிரியமானவளே! நற்புத்திரரைப் பெறுவதால் என்னைக் கடனில்லாதவனுகச் செய்வாய் என்று தன் கணவனுல் கட்டளையிடப்பட்டவளாய் பதிவிரதையாகிய குந்தீயானவள் அந்த மந்திரத்தை நினைத்தாள்.

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃— 𑌗𑍁𑌰𑍋! 𑌇𑌦𑌮𑌾𑌶𑍍𑌚𑌰𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑍁𑌤𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌯𑌦𑌵𑌾𑌦𑍀𑌃 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍𑌸𑍁𑌤𑌾 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑍍𑌯𑌭𑌙𑍍𑌗𑌃 𑌕𑌿𑌂 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍? 𑌏𑌵𑌂 𑌯𑌦𑌿 𑌸 𑌰𑌾𑌜𑌾 𑌅𑌵𑌿𑌚𑌾𑌰𑍍𑌯𑌤𑍁 𑌕𑌥𑌂 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌵𑌚𑌨𑌮𑌙𑍍𑌗𑍀𑌚𑌕𑌾𑌰?

சி. ஓ குருவே! இது மிக வாச்சரியம், மந்திரத்தால் புத்திரனைப் பெறுவதென்று யாதொன்றைச் சொன்னீர்களோ? ஒருக்கால் தேவரின் அருளால் புத்திரர் உண்டாகிறுர்கள். அதனுல் பெற்றவளுக்குப் பதிவிரதையின் தன்மை குறைவது ஏன் உண்டாகமாட்டாது? இவ்வாறுகில் அந்த அரசன் யோசிக்காமல் எப்படி அவளுடைய வார்த்தையைச் சம்மதித்தனன்?

𑌗𑍁𑌰𑍁𑌃— 𑌵𑌤𑍍𑌸! 𑌶𑍃𑌣𑍁 𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌖𑌿𑌲𑌂 𑌸𑌂𑌶𑌯𑌮𑌪𑌾𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇. 𑌯𑌤𑍍𑌰 𑌯𑌤𑍍𑌰 𑌦𑍇𑌵𑌤𑌾𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑍇𑌨 𑌸𑍁𑌤𑍋𑌤𑍍𑌰

𑌜𑌾𑌯𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌾𑌨𑌿𑌰𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑍋 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿.

கு. அடா! கேள் உனக்கு அவ் விஷயத்தில் ஓர்விதமான சந்தேகமு முண்டாகவேண்டாம். எவரெவரிடம் தேவரின் அருளால் புத்திரன் பிறக்கின்றனோ? அதனு லவர்கட்குப் பாதிவிரத்தியத்திர்க்குக் குறை இல்லை என்று நல்லோர் சொல்லுகின்றனர்.

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃—𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌕𑌿𑌮𑍍?

சி. அதற்குக்காரணமென்ன?

𑌗𑍁𑌰𑍁𑌃—𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌹𑌿𑌮𑍍𑌨𑍈𑌵.

கு. மந்திரத்தின் மஹிமையே.

𑌶𑌿𑌷𑍍𑌯𑌃—𑌸𑌾𑌵𑌧𑌾𑌨𑍋𑌽𑌸𑍍𑌮𑌿. 𑌤𑌤𑌸𑍍𑌤𑌤𑌃.

சி. கவனிப்புள்ளவனுக ஆகிறேன். பிறகு பிறகு.

𑌗𑍁𑌰𑍁𑌃—𑌕𑍁𑌮𑌾𑌰! 𑌸𑌾 𑌕𑍁𑌨𑍍𑌤𑍀 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌸𑌸𑌂 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌤𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍀 𑌤𑌦𑌨𑍁𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌤𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌯𑌮𑌰𑌾𑌜𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌜𑌜𑌾𑌪. 𑌸 𑌦𑍇𑌵𑌃 𑌸𑍍𑌵𑌕𑍀𑌯𑌾𑌂𑌶𑌸𑌮𑍍𑌭𑍂𑌤𑌂 𑌸𑍁𑌤𑌂 𑌕𑍁𑌨𑍍𑌤𑍍𑌯𑍈 𑌦𑌦𑍌. 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑌂 𑌵𑌾𑌯𑍁𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯𑌾𑌜𑌪𑌤𑍍. 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌵𑌿𑌨𑍀𑌤𑍋 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌂𑌶𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌹𑌿𑌤𑌮𑍇𑌕𑌂 𑌸𑍁𑌤𑌂 𑌦𑌦𑍌.

கு. சிறுவனே! அந்த குந்தியானவள் பகவானுகிய தூர்வாஸரை நமஸ்கரித்து அவரை மனதினுல் தியானித்தவளாய் அவரால் அருள் செய்யப்பட்ட அந்த மந்திரத்தை முதலில் தருமராஜனை உத்தேசித்து ஜபித்தனள். அந்த தேவன் வந்து தன்னம்சமாகிய புத்திரனைக் குந்திக்குக் கொடுத்தனர். மறுதடவை அந்த மந்திரத்தை வாயுதேவனைக் குறித்து ஜபித்தனள். அவனும் வணக்கத்துடன் வந்து தன் அம்ச விசேஷத்துடன்கூடிய ஓர் புத்திரனை அருளினன்.

𑌤𑌾𑌵𑌤𑌾 𑌅𑌤𑍃𑌪𑍍𑌤𑌾 𑌸𑌾 𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌪𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌤𑌦𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿𑌸𑍍𑌮. 𑌤𑌦𑌾 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍀𑌭𑍂𑌯 𑌸𑍍𑌵𑌾𑌂𑌶𑍇𑌨 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌤𑌨𑌯𑌂 𑌦𑌦𑍌.

அவ் வளவாலும் திருப்தி பெறாத அவள் தேவாதிபனை (இந்திரனை) உத்தேசித்து அதைப் பலதடவை உச்சரித்தாள் அப்பொ

ஸூது ஸஹஸ்ராக்ஷன் (தன்னை) புலப்படச் செய்தவனாகி தனது அம்சத்துடன் விளங்குகின்ற புத்திரனை அளித்தனன்.

अथान्या राज्ञी सपत्नीं बहुप्रजामवेक्ष्य सुखस्यापि स्वयं च प्राप्तुमिच्छन्ती तदा हे प्रिये! ममापि प्रसवे कामोऽस्ति। यदि दयास्ति मयि तर्हि तं मन्त्रं मह्यमुपदिश इति तया प्रार्थिता भर्तृप्रेमपरायणा सा कुन्ती तस्यै तं मन्त्रमुपादिशत्। सापि तेन मन्त्रेण अश्विनीदेवतानुग्रहात् द्वौ पुत्रावसूत।

பிறகு மற்றொருத்தியான மாத்ரி தன் சக்களத்தியைப் பலப் பிரஜையுள்ளவளாகக் கண்டு தனக்கும் சுகமாகப் பெறுதலை இச்சித்தவளாய் அப்பொழுது ஓ பிரியையே! எனக்கும் பிள்ளைபெறுவதில் ஆசை இருக்கின்றது. என்னிடம் உனக்கு தயை உண்டாகில் அந்த மந்திரத்தை எனக்கு உபதேசிக்கவேண்டுமென்று அவளால் பிரார்த்திக்கப்பட்டவளாய் பர்த்தாவினிடம் ப்ரீதியே பரமகதியாக உடைய அந்த குந்தியானவள் அவளுக்கு அம் மந்திரத்தை உபதேசித்தனள். அவளும் அந்த மந்திரத்தால் அஸ்வினீ தேவர்களின் அருளால் இரண்டு புத்திரரைப் பெற்றனள்.

अथ स राजा तान् विशेषरूपादिसम्पन्नान् भुवि स्थितान् देवानिव वीक्ष्य परमानन्दमनुभूय आत्मानं कृतार्थं मेने। ते कुमारा दिने दिने शुक्लपक्षचन्द्रवद् ववृधिरे। पाण्डुस्तु मुनिशापमवगण्य ततः स्वर्गमाप।

பிறகு அந்த அரசன் அவர்களை விசேஷமான அழகு முதலியவற்றுடன்கூடிய பூமியில் இருக்கின்ற தேவர்களைப்போல் கண்டு அதிககளிப்புற்றவனாகி தன்னை எல்லாப்பயன் பெற்றவனாக எண்ணினன். அந்தப் பிள்ளைகள் தினந்தோறும் சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல் விருத்தி அடைந்தனர். பாண்டு வென்றால் முனிவரின் சாபத்தை அலக்ஷியம் செய்து அதனால் சுவர்க்கமடைந்தனர்.

शिष्यः—स्वामिन्! धृतराष्ट्रस्य महिष्यां गान्धार्यां पुत्रशतं कथमुत्पन्नम्? तत् कथय।

சி. ஸ்வாமி! தூர்வாஸமுனிவர் மிகக் கோவமுள்ளவரென்று கேள்வியுண்டு. எக்காரணத்தால் இவர் புவியில் மிகக் கோபமுள்ளவர்க்கு உவமானமாகச் சொல்லப்படுகிறுரோ? அக்காரணத்தால் இவரை அவள் எப்படி சந்தோஷிக்கச் செய்தனள் அதை எனக்குச் சொல்லவேணும்.

ஶ்ரீகுரு:— வத்ஸ! தச்சரித்ரம் ஸம்க்ஷேபேணோச்யமாநம் ஶ்ருணு. குந்திநாமகஸ்ய ராஜாஸீத் ஸ சாப்ரஜாஸ்ஸந் கந்யாமேகாம் ஸ்வீக்ருதவாந். ஸா பித்ரா ஸம்ருத்த்யா லாலிதா ரூபௌதார்யாதி குணேந விராஜதே.

கு. குழந்தாய்! அந்தச் சரித்திரச் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது கேள். குந்தி எனப் பெயருள்ள ஓர் அரசன் இருந்தனன். அவன் பிரஜையில்லாதவனுகி ஓர் கன்னியைச் ஸ்வீகாரம் வாங்கிக்கொண்டனன். அப்பெண் பிதாவினுல் செல்வாக்குடன் வளர்க்கப்பட்டவளாய் அழகு கொடை முதலிய குணங்களுடன் விளங்கினுள்.

